# ஆவியானவரால்

# வழி நடத்தப்படுதல்

## ஆவியானவர் உங்களுடனே வாசம்பண்ணுகிறார் நாள் 1

*<u>யோவான் 14:16-17</u> நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். 17. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

உணர்ச்சிப்பூர்வமாக கஷ்டத்திலிருக்கும் மக்களுக்கு அவர்களுடைய பிரச்சனையை கண்டுபிடித்து அதன் மூலம் அந்த பிரச்சனைக்கு தேவையான உதவியை அளிப்பதுதான் ஆலோசகர்கள் செய்யும் பணி. அதிகப்படியான ஆலோசகர்கள் தங்களுடைய வாடிக்கையாளரின் குறிப்பிட்ட ஒரு பிரச்சனையை மாத்திரம் கவனித்து அதை நீண்ட கால அளவிற்க்கு உதவி செய்யாமல் ஒரு குறிப்பிட்ட கால அளவே செய்து முடித்து, அந்த வாடிக்கையாளரின் முன்னேற்றம் மற்றும் அவருடைய நடக்கையை கருத்தில் கொண்டு அவருடைய தனிப்பட்ட பிரச்சனைகள் அல்லது வாழ்க்கையின் திருப்பங்களுக்கு உதவுபவர்களாயிருப்பார்கள்.

ஒரு ஆலோசகராக பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்க்காக அல்ல நிரந்தரமாயிருப்பதற்க்காக. அவர் நம்முடனே வாசம்பண்ணி நமக்குள்ளாகவே இருக்கிறார். இந்த உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது.

நாம் அதிகமாக மரியாதை காட்டும் ஒருநபர் நம்முடைய வீட்டிற்க்கு வந்து நம்முடன் வசிக்கிறார் என்று கர்ப்பனை செய்து பாருங்கள். அவர் சிறப்பாக உணரவும் சௌகரியமாக இருக்கவும் நாம் எல்லா முயற்சிகளும் எடுப்போம். சாதாரண உணவுகள் அல்ல சிறப்பான உணவு வகைகள் அதுவும் சரியான நேரத்திற்க்கு அவருக்கு கிடைக்க முயல்வோம். அந்த நபருக்கு எல்லாவற்றிலேயும் மிக சிறந்ததை நாம் கொடுக்க விரும்புவோம்.

நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரை நாம் சௌகரியமாகவும் மற்றும் சிறப்பாகவும் உணரச்செய்கிறோமா? ஒரு ஆலோசகராக அவர் நம்மிடம் பேசுவதை நேசிக்கிறார். அவருடைய ஆலோசனையை கேட்க நாம் நேரம் ஒதுக்குகிறோமா? கடைசியாக எப்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு கொடுத்த ஆலோசனை அல்லது வழிகாட்டுதலை நீங்கள் கேட்டு அதை பின்பற்றினீர்கள்? நம்முடைய விருப்பங்களுக்கு அது விரோதமாக இருந்தாலும் அவருடைய விலையேறப்பெற்ற ஆலோசனைகளுக்கு செவிகொடுப்போம் என்கிற பழக்கத்திற்க்கான அர்ப்பணிப்பை நாம் எடுப்போமா? ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறோம் என்று அப்பொழுதுதான் நம்மால் மன உறுதியுடன் கூறமுடியும்.

<u>செயல்முறை</u>

பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனைக்கு கவனித்து செவிகொடுத்து அவருடைய வழிகாட்டுதலின்படி நடப்பதற்க்கு வேண்டுதல் செய்யக்கூடிய ஒரு விசேஷித்த நேரத்தை உருவாக்குங்கள்.

## ஆவியானவர் எல்லாவற்றையும் உங்களுக்கு போதிப்பார் நாள் 2

*<u>யோவான் 14:26-27</u> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். 27. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.*

நம்முடைய பள்ளி அல்லது கல்லூரி நாட்களில் நாம் சில பாடவகுப்புகளுக்கு செல்ல விரும்பமாட்டோம். ஒருவேளை நமக்கு அந்த பாடத்தையோ அல்லது அந்த ஆசிரியரையோ பிடிக்காமல்

இருந்திருக்கலாம். அல்லது அந்த வகுப்பை விட வெளியிலிருக்கும் திரைப்படத்தையோ அல்லது சில விளையாட்டையோ நாம் அதிகம் விரும்பியிருக்கலாம்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு மிகச்சிறந்த ஆசிரியர். பரிசுத்த ஆவியானவரைவிட சிறப்பாக யாராலும் போதிக்கமுடியாது. அவர் சொல்லித்தரக்கூடிய பாடமானதும்கூட மிகச்சிறந்ததாயிருக்கும். ஒருவேளை அந்த பாடத்தைக்குறித்து கற்றுக்கொள்வதற்க்குக்கூட நேரமின்றி நாம் இருக்கிறோம். ஒருவேளை அந்த பாடம் நமக்கு பிடிக்காததாயிருக்கலாம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுப்பதைக்காட்டிலும் வேறு ஏதோ ஒன்றை நாம் அதிகமாக விரும்புகிறோம்.

இந்தப்பாடம் நமக்கு சமாதானத்தை அளிக்கும். எல்லா பிரச்சனைகள் மற்றும் பயத்திலிருந்தும் நம்மை இது விடுவிக்கும். ஒரு நாள் இந்தப்பாடத்தை நாம் விரும்பியே ஆகவேண்டும், அந்த நாள் ஏன் இன்றாயிருக்கக்கூடாது?

**செயல்முறை**

வசனங்களிலிருந்து பரிசுத்த ஆவியானவர் கூறக்கூடியவைகளுக்கு செவிகொடுக்கும் ஒரு விசேஷித்த நேரத்தை உருவாக்குங்கள். உங்களுக்கு போதித்து உணர்த்தவும் மற்றும் தேவனுடைய சித்தத்தை செய்யவும் உங்களுக்கு போதிக்கும்படியாக அவரிடம் கேளுங்கள்.

## ஆவியானவர் இயேசுவைக்குறித்து சாட்சிகொடுப்பார் நாள் 3

*யோவான் 15:26-27 பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். 27. நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.*

சாட்சிகொடுப்பது என்பதன் விளக்கம் ஒரு காரியத்தைக்குறித்து தீவிரமாக பேசுவது என்பதும், தனிச்சிறப்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் அல்லது ஆதாரத்தை அளித்தல் என்பதாகும். நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டோமென்றால், நாம் இயேசுவைக்குறித்து சாட்சி கொடுப்போம்.

ஆதிமுதல் அவருடனே அவர்கள் இருந்தபடியால் அவர்கள் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்று இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கூறினார். ஆகவே, எவ்வளவு நீண்டகாலம் பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் வாசம் செய்துகொண்டிருக்கிறாறோ அந்த அளவிற்க்கு தீவிரமாக நாம் இயேசுவைக் குறித்து அதிகமாக சாட்சி கொடுக்கவேண்டும்.

நாம் சுற்றி பார்க்கும்போது மக்கள் பிறரைக்குறித்தும், சில அமைப்பைக்குறித்தும், நடைமுறை காரியங்களைக்குறித்தும் சாட்சிகொடுப்பதை காண்கிறோம் ஆனால் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்கும் மக்களை மிகவும் குறைவாகவே பார்க்கிறோம்.

இயேசுவையா அல்லது மற்ற காரியங்களையா எதைக்குறித்து தீவிரமாக பேசப்போகிறோம் என்று தேர்வு செய்யும் பொறுப்பு நம்மிடத்தில்தான் இருக்கிறது.

**செயல்முறை**

நீங்கள் இன்று நேரம் எடுத்து யாராவது ஒருவரிடத்தில் இயேசுவைக்குறித்து சாட்சி கொடுங்கள். நீங்கள் தினந்தோறும் இயேசுவைக்குறித்து ஒருவரிடத்தில் சாட்சி கொடுப்பதை நடைமுறைப்படுத்தும் ஒரு பழக்கமாக மாற்றிக்கொண்டு இன்று ஒரு நபரில் துவங்கி அதில் இன்னும் வளர்ச்சியடையச் செய்யுங்கள்.

## ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்துவார் நாள் 4

*யோவான் 16:13-14 சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். 14. அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.*

இந்த உலகத்தில் மக்கள் தங்களுக்கு மகிமையைத் தேடுவதையே காலகாலமாக மீண்டும் நாம் காண்கிறோம். அவர்கள் தங்களைக்குறித்தே அதிக மேன்மையாக பேசிக்கொள்வார்கள். அதுமட்டுமன்றி பதவிகளிலிருக்கும் மக்கள் அதிகமாக மகிமையடைவதையும் நாம் காண்கிறோம்.

நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டோமென்றால், ஆவியானவர் எல்லா சத்தியத்திற்க்குள்ளும் நம்மை நடத்துவார். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வருகிறது. பரலோகத்தில் நாம் இந்த சத்தத்தை கேட்கலாம், “அல்லேலூயா! இரட்சிப்பும் மகிமையும் மற்றும் வல்லமையும் நம்முடைய தேவனுக்கே உரியது”.

ஆவியானவர் தன்னுடைய சுயமாய் பேசமாட்டார்; அவர் தாம் கேள்விப்படவற்றையும் மற்றும் வரப்போகிற காரியங்களைக்குறித்தும் நமக்கு அறிவிப்பார்.

நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டோமென்றால், ஆவியானவர் இயேசுவிடத்திலிருந்து எடுத்து நமக்கு அறிவிப்பார். தேவனைப்பற்றும் அறிவில் நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோமா?

**செயல்முறை**

உங்களுக்கு எந்த சில வழிகளின் மூலம் பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப்பற்றி புரிந்துகொள்ளவைத்து அதன் மூலம் முன்பு இருந்ததைக்காட்டிலும் இயேசுவை பாராட்டும் விதம் வளர்ச்சியடைந்து அவரை மகிமைப்படுத்த (துதித்தல், கனப்படுத்துதல்) உதவி செய்தது?

## நாம் தைரியமாக பேசுவதற்க்கு ஆவியானவர் செயல்படுத்துவார் நாள் 5

*அப்போ 4:31-32 அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். 32. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.*

அப்போஸ்தலர்களின் காலத்திற்க்கு சென்றோமானால் அவர்கள் எப்பொழுதெல்லாம் இயேசுவைக்குறித்து பேசுகிறார்களோ அப்பொழுதெல்லாம் துன்புறுத்தப்பட்டதை நாம் வாசிக்கிறோம். ஆனால் அவர்கள் அந்த துன்புறுத்துதலைக்குறித்து வெட்கப்பட்டதாகவோ அல்லது பயந்ததாகவோ நம்மால் பார்க்கமுடியாது. இது எப்படியெனில் அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவவசனத்தை தைரியமாக பேசுவதற்க்கு அது செயல்படுத்தியது.

போதிப்பதற்க்கு அல்லது பிரசங்கிப்பதற்க்கு நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போது நாம் அதை தைரியமாக செய்கிறோமா அல்லது வேறு யாராவது அதை செய்யட்டும் என்று நினைக்கிறோமா. நாம் ஒருவேளை அதை தலைவர்கள் மாத்திரமே செய்யவேண்டுமென நினைப்பதனால் இருக்கலாம்.

விசுவாசிகளாகிய அனைவரும் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் வசனத்தை தைரியமாக பிரசங்கித்தார்கள்.

**<u>செயல்முறை</u>**

உங்களுடைய ஏதாவது ஒரு கூட்டத்தில் தைரியமாக பிரசங்கியுங்கள். ஒருவேளை நீங்கள் தொடர்ச்சியாக பிரசங்கிப்பவராயிருந்தால், இன்னொரு சீஷருக்கு அந்த பிரசங்கிக்கக்கூடிய வாய்ப்பை கொடுங்கள்.

---

**பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொல்லாதீர்கள் நாள் 6**

---

*<u>அப்போ 5:1-3</u> அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். 2. தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். 3. பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?*

சில நேரங்களில் சிலவற்றின் மேல் நாம் காட்டக்கூடிய பிரியமானது, நாம் தேவனிடத்தில் அதை மறைத்துவிடலாம் என்ற ஒரு குருடான சிந்தனைக்கு நம்மை தள்ளுகிறது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட அனனியா என்பவன் குறுகிய காலத்திலேயே சாத்தான் தன்னுடைய இருதயத்தை நிரப்ப அனுமதித்தான்.

நாம் எதனால் நிரப்பப்பட்டிருக்கிறோம்? தேவனிடத்திலிருக்கும் அன்பினாலா அல்லது இந்த உலகத்திலிருக்கும் மற்ற காரியங்களினாலா? ஆதலால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். (யாக்கோபு 4:4).

நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டோமென்றால், நாம் எப்பொழுதுமே சத்தியத்தை பேசுவோம். நாம் யாரிடத்திலாவது பொய் பேசினோமென்றால் அதை நாம் தேவனிடத்தில் பேசுகிறவர்களாயிருப்போம்.

**<u>செயல்முறை</u>**

ஒருவேளை நீங்கள் கடந்தகாலத்தில் யாரிடத்திலாவது பொய்பேசியிருந்தால், அந்த நபரிடத்தில் சென்று அதை அறிக்கையிட்டு அவரிடம் மன்னிப்பு கேட்போம். இப்பொழுதிலிருந்து நாம் உண்மையை மாத்திரமே பேசுவோம்.

---

**பரிசுத்த ஆவியானவரை சோதிப்பதற்க்கு ஒருமனப்படாதீர்கள் நாள் 7**

---

*<u>அப்போ 5:7-9</u> ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். 8. பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள். 9. பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்களும் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான்.*

அனனியாவின் மனைவி சப்பீராள் ஒருவேளை அனனியாவை இதிலிருந்து தடுத்திருக்கலாம், ஆனால் அவளையும் இங்கு குருடாக்கப்பட்டவளாக பார்க்கமுடிகிறது. அவளும் பொய் பேசினாள். நாம் உணர்ச்சிப்பூர்வமாக ஒருவருடன் இணைந்திருக்கும் பட்சத்தில் எவ்வளவு எளிதாக நாம் பாதிக்கப்படுகிறோம்?

தேவன் நம்முடைய பார்வைக்கு ஏதாவது ஒரு காரியத்தை கொண்டுவரும்போது நாம் அதைக்குறித்து பேசுவதுதான் சிறந்தது. நாம் உணர்ச்சிப்பூர்வமாக சிக்கிக்கொள்வதைக் காட்டிலும் தேவனுக்கு எது பிரியமாயிருக்கும் என்பதைக்குறித்து கவனம் செலுத்துவதுதான் மிக முக்கியம். பிறகு நம்முடைய உணர்ச்சியானது பொய் பேச வழிநடத்தி பரிசுத்த ஆவியானவரை சோதிக்கும்.

**செயல்முறை**

அந்நியோண்யத்திலாவது அல்லது உங்களுடைய குடும்பத்திலாவது மற்றவர்களைக்குறித்த ஏதாவது ஒரு காரியத்தை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறாரா? அதைக்குறித்து ஜெபியுங்கள் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு அதைக்குறித்து அவர்களிடம் பேசி அவர்கள் தேவனைப் பிரியப்படுத்த உதவி செய்யுங்கள்.

## பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்காதீர்கள் நாள் 8

*<u>அப்போ 7:51-53</u> வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள். 52. தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். 53. தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான்.*

நாம் கீழ்படிவதற்க்காகத்தான் தேவன் அவருடைய கட்டளைகளை நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் கீழ்படியாதிருக்கும்பட்சத்தில், அவர் மக்களை நம்மிடத்தில் அனுப்பி அவருடை பாதையில் நம்மை நடத்துகிறார். அவர் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். அதிக நேரங்களில் தேவனுடைய வழி காட்டுதலை கொண்டுவரும் நபர்கள் கேலி செய்யப்பட்டதும், அவமானப்படுத்தப்பட்டதும் மற்றும் கொலை செய்யப்பட்டதையும் நாம் பார்க்கிறோம்.

*தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். (எபிரெயர் 13:7). உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபிரெயர் 13:17).*

தேவனுடைய வார்த்தையை நாம் உள்ளே அனுமதிக்காதிருக்கும்போது நாம் பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்கிறோம்.

**செயல்முறை**

சிறிது நேரம் எடுத்துக்கொண்டு கிறிஸ்துவுக்குள் நீங்கள் எவ்வாறு வளர்ச்சியடையலாம் என்று சில தலைவர்களுடன் நேரம் செலவழித்து அவர்களிடம் கேளுங்கள். எந்தவித எதிர்ப்புமின்றி அவர்கள் சொல்வதை கவனியுங்கள்.

## பணத்தினால் வாங்கக்கூடியவர் அல்ல பரிசுத்த ஆவியானவர் நாள் 9

*<u>அப்போ 7:18-21</u> அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: 19. நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். 20. பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. 21. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.*

நம்மிடத்தில் பணம் இருந்தால் நாம் எதையும் செய்யலாம் என்று சில நேரங்களில் ஒரு தூண்டுதலான எண்ணம் வருகிறது. தேவனுடைய வரமாகிய பரிசுத்த ஆவியானவரை பணத்தினால் வாங்கி விடலாம் என்று சீமோன் நினைத்தான்.

அவருடைய வரத்தை யாருக்கு அளிப்பது என்று தேவன்தான் தீர்மானிப்பார். தேவனால் வழங்கப்படாத நிலையில் அதை நாம் பெற முடியாது. தேவன் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தாலொழிய நாம் யாருக்கும் அதை கொடுக்கமுடியாது. தேவனுக்கு கீழ்படிபவர்களுக்கு அவர் பரிசுத்த ஆவியானவரை அளிக்கிறார்.

பணமானது இவற்றையெல்லாம் பெற்றுத்தரும் என்று நாம் நினைக்கும்போது, தேவனிடத்தில் நமக்கு பங்குமில்லை அல்லது அவருடைய ஊழியத்தில் நமக்கு பாகமுமில்லை, ஏனென்றால் நம்முடைய இருதயமானது தேவனுடன் சரியான விதத்தில் இல்லை.

<u>செயல்முறை</u>

தேவனுடன் எந்த காரியங்களில் உங்களுடைய இருதயம் சரியாக இல்லை என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். தேவன் அவற்றிலிருந்து நம்மை விடுவிக்கும்படி ஜெபிப்போம்.

---

**பரிசுத்த ஆவியானவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார் நாள் 10**

---

*<u>அப்போ 9:31</u> அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.*

பரிசுத்த ஆவியானவரால் சபைகள் உற்சாகமடைவதை நாம் இங்கு பார்க்கிறோம். கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடு நடந்து பெருகின.

கடந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவர் உங்களை பக்திவிருத்தியடையச் செய்து மற்றும் ஆறுதல் படுத்தியதை நீங்கள் என்ன வழிகளில் நினைவுபடுத்தி பார்க்கமுடிகிறது?

நம்முடைய சபையைக்குறித்தும் குடும்ப சபையைக்குறித்தும் என்ன நினைக்கிறீர்கள்? அது எண்ணிக்கையில் வளருகின்றதா? நாம் தேவனுக்கு பயப்படுகிற பயத்தோடு இருக்கிறோமா? நம்முடைய குடும்பசபையிலிருக்கும் சீஷர்கள் தேவனுக்கு பயப்படுகிற பயத்தோடு இருக்கிறார்களா? நாம் சமாதானத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோமா?

<u>செயல்முறை</u>

பரிசுத்த ஆவியானவருடைய ஆறுதல் படுத்தும் வழிப்பாதையாக நீங்கள் உங்களை அனுமதியுங்கள். உங்களுடைய குடும்பசபையில் ஒரு உற்சாகப்படுத்தும் ஆறுதலின் நேரத்திற்காக முயற்சி செய்து தேவனுக்கு பயப்படுகிற பயத்தோடு வாழ்வதற்க்கு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

---

**ஆவியின்படி நடந்துகொள்ளுங்கள் நாள் 11**

---

*<u>ரோமர் 8:5-6</u> அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். 6. மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.*

நம்முடைய சரீரத்தை அதிகமாய் கவனிக்கின்ற நாம் நம்முடைய சிந்தனையைக் குறித்து சில சமயங்களில் மறந்துவிடுகிறோம். சிந்தையானது மனித உறுப்புகளை கட்டுப்படுத்துகிறது. அது ஞானம் மற்றும் அறிவின் மூலம் வழிநடத்துகிறது. நம்முடைய நினைவாற்றலின் உதவியின் மூலம் தினந்தோறும் நம்மை வழிநடத்துகிறது.

நம்முடைய சிந்தனையை ஆவியிடம் ஒப்படைத்தால், ஆவியானது நம்முடைய சிந்தனையை கட்டுப்படுத்தும். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். இல்லையெனில், நம்முடைய சிந்தனையானது மாம்சத்திற்க்கு உரியவற்றைப் பற்றி சிந்திக்கும். மாம்ச சிந்தை மரணத்தை தரும்.

**செயல்முறை**

நம்முடைய விருப்பங்களை எழுதி, நம்முடைய சிந்தனையானது ஆவியினாலா அல்லது மாம்சத்தினாலா இவைகளில் எதனால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று பார்க்கவும்.

**ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் நாள் 12**

*ரோமர் 8:26-27 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். 27. ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

நம்முடைய வாழ்க்கையில் சான்றிதழ் பெருவதற்க்காக சில அலுவலகங்களுக்கு சென்றுவந்த அனுபவம் இருக்கிறதா? அங்கு யாரையும் நமக்கு தெரியாததினால் அவர்களுடைய வழிமுறைகளை புரிந்துகொள்ள போராடியிருக்கலாம். திடீரென ஒருவர் வந்து உங்களுக்கு உதவி செய்ததினால் நீங்கள் சமாதானத்துடன் அலுவலகத்தை விட்டு வெளியே சென்றிருப்பீர்கள்.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். சில நேரங்களில் என்னசெய்வதென்று நாம் அறியாமலிருக்கிறோம். ஜெப வாழ்க்கையில் நாம் அனைவரும் போராடிக்கொண்டிருக்கிறோம். சிலநேரங்களில் எப்படி ஜெபிக்கவேண்டும் எதற்க்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரியாமலிருக்கிறோம்! பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஜெப வாழ்க்கையில் நமக்கு உதவி செய்கிறார். ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். தேவனுடையா சித்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

**செயல்முறை**

உங்களுடைய ஜெபவாழ்க்கை மேம்பட பரிசுத்த ஆவியானவரிடம் உதவி கேளுங்கள். அவருடைய வழிநடத்துதலின்படி நீங்கள் ஜெபித்து அதனுடைய வளர்ச்சியை அனுபவித்து களிகூறுங்கள்.

**பரிசுத்த ஆவியானவரால் ஏற்படும் நீதி, சமாதானம், சந்தோஷம் நாள் 13**

*ரோமர் 14:17-18 தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. 18. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்.*

நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருக்கிறோம். நாம் அனைவரும் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்புகிறோம். கிறிஸ்துவுக்கு எப்படி ஊழியம் செய்கிறோம் என்பது மிகவும் முக்கியமா? இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது.

பரிசுத்த ஆவியினாலுண்டான நீதி, சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் நோக்கமாயிருக்கிறீர்களா? ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளை செய்ய நோக்கமாயிருக்கிறீர்களா? நாம் நீதியற்றவர்களாய் இருந்தால், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இழப்போம்.

ஆகையால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்.

**செயல்முறை**

உங்களின் சமாதானத்தை பறிக்கக்கூடிய நிலைமை உங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது இருக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெறும்படி அவருடைய

உதவியையும் ஆலோசனையையும் கேட்டு சரி செய்துகொள்ளவும். “முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்” என்கிற கட்டளையை நிறைவேற்ற வழியைக் கண்டறியவும்.

## ஆவியானவர் எல்லாவற்றையும் ஆராய்ந்திருக்கிறார் நாள் 14

*1 கொரி 2:9-11 எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; 10. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 11. மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*

தேவன் நம்மை அன்பு செய்கிறார். தேவன் விசேஷமானதை நமக்கு ஆயத்தம் செய்திருக்கிறார். அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். தேவன் நமக்கு இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்தினார். ஆவியானவர் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.

உங்களுக்கு நெருக்கமானவர்கள் அல்லது வேறுயாதொருவருடைய நினைவுகளை அறியும் திறன் உங்களிடத்தில் இருக்கிறதா? ஆனால் நமக்குள் இருக்கும் ஆவியானவர் தேவனுடைய நினைவுகளையும் அறிய உதவுகிறார்.

தேவன் நமக்கு கொடுத்திருக்கும் இந்த அற்புதமான வரத்தைக்குறித்து எவ்வளவு விசேஷித்தவர்களாக நாம் உணரவேண்டும்.

**செயல்முறை**

பரிசுத்த ஆவியின் வரம் என்னும் அற்புதமான வரத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்த நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

## உங்களுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் நாள் 15

*1 கொரி 3:16-17 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? 17. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.*

ஒரு கோவில் அல்லது சபைக்கட்டிடத்திற்குள் நீங்கள் சகலவிதமான பாவகாரியங்கள் உள்ளே நடப்பதைக்காண்பது போல் கற்பனை செய்துபாருங்கள். நாம் வருத்தப்படமாட்டோமா? சில நேரங்களில் சபைக்குள் நடக்கும் சில காரியங்களை காணும்போது நாம் கோபம் கொள்வோம்.

*1 கொரி 6:18. வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.*

*1 கொரி 6: 20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

நம்முடைய சரீரமும் அனைத்து பாவத்திலிருந்தும் விடுதல் அடையவேண்டும். தேவனுடைய ஆலயத்தை நாம் அழிக்காமலிருப்போம். அதை புனிதமாய் காப்போம்.

**செயல்முறை**

எந்த ஒரு பாவ செயல்களில் உங்களுடைய சரீரத்தின் குறிப்பிட்ட அவயங்கள் ஈடுபட்டதைக்குறித்து பாவ அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்க்கும் மனந்திரும்புதலுக்கும் ஜெபம் செய்ய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். சரீரத்தின் அதே அவயங்களை தேவனுக்கு

கனம் சேர்க்கும்படி பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் திட்டமிடுங்கள்.

**பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு நாள் 16**

*<u>1 கொரி 12:4-7</u> வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. 5. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. 6. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 7. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*

நாம் எல்லோருமே பல காரியங்களில் வித்தியாசப்பட்டவர்களாய் இருந்தாலும் நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே. அதனால் அனைத்து சீஷர்களுக்கும் வேற்றுமையில்லாமல் கவனம் செலுத்த வேண்டும். சில நேரங்களில் அவர்கள் செய்யும் சேவை அல்லது திறமைகளின் அடிப்படையில் சிறப்பு கவனம் செலுத்த ஆசைப்படுகிறோம். எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.

ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியின் வரங்கள் பொதுவான நன்மைக்காக வழங்கப்பட்டது. நாம் பெற்ற வரங்களை தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்துகிறோமா?

<u>செயல்முறை</u>
தேவன் உங்களுக்கு கொடுத்த வரங்களுக்காக நன்றி செலுத்துவும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு கொடுத்த வரத்தை பயன்படுத்தி சபைக்கு சேவை செய்ய முன்வாருங்கள்.

**பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு நாள் 17**

*<u>1 கொரி 12:8-11</u> எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், 9. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், 10. வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. 11. இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.*

எப்பொழுதுமே நம்முடைய அந்நியோண்யத்தில் வெவ்வேறு வரங்களை சீஷர்களிடம் பார்க்கமுடியும். அனைத்தும் ஒரே ஆவியின் கிரியைகள் என்றாலும் நமக்கு என்ன வேண்டுமென்று நம்மால் தேர்வுசெய்ய முடியாது. பரிசுத்த ஆவியின் வரங்களை தேவனின் விருப்பப்படியே நமக்கு கொடுத்திருக்கிறார்.

உங்கள் வரங்கள் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? நம்முடைய வரங்களை பொது நலனுக்காகப் பயன்படுத்துகிறோமா?

வேறுபட்ட வரங்கள் என்றாலும், நாம் ஒருவரையொருவர் சார்ந்து இருக்கிறோம். தேவன் இவை அனைத்தையும் ஒன்றாக்கி அவருடைய இராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதற்க்கு இப்படி செய்திருக்கிறார்.

<u>செயல்முறை</u>
தேவன் உங்களுக்கு கொடுத்த வரத்தை வல்லமையாக பயன்படுத்தி அவருடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவதற்க்கு உதவியாக இருக்கும்படி ஜெபிக்கவும்.

**ஆவியோ உயிர்ப்பிக்கிறது நாள் 18**

*<u>11 கொரி 3:5-6</u> எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. 6. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே*

*எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.*

நாம் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவனே நம்மை புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி தகுதி-யுள்ளவர்களாக்கினார். நியாயப்பிரமாணமானது வெளிப்புறமானதும் கற்களால் எழுதப்பட்ட பழைய உடன்படிக்கையின் கடிதமுமாக இருக்கிறது.

புதிய உடன்படிக்கையில் நமக்குள் வாசமாயிருக்கிற ஆவியானவரே நம்மை வழிநடத்தி நம்முடைய இதயங்களில் நியாயப்பிரமாணமாக இருக்கிறார். கடிதமும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும் சத்துருக்களாயிராமல் ஒருங்கிணைந்து செயல்படுகிறதாக இருந்தாலும் ஆவியே உயிர்ப்பிக்கிறது.

<u>செயல்முறை</u>

நீங்கள் ஊழியக்காரராக தகுதியானவர்களாக இருக்கிறீர்களா? எந்தெந்த இடங்களில் திறமையான ஊழியக்காரராக வளரவேண்டும் என்று யோசித்து பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக ஜெபியுங்கள்.

## ஆவிக்குரிய ஊழியம் அதிக மகிமையுள்ளது — நாள் 19

*<u>11 கொரி 3:5-6</u> எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. 8. ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? 9. ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக்கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.*

பழைய உடன்படிக்கையின் ஊழியம் அதிக ஆக்கினைக்குள்ளானது. புதிய உடன்படிக்கையின் ஊழியமோ நீதிக்குரியது. நாம் மற்றவர்களின் இருதயத்தை நிதானிக்கும்போது, நீதிக்கு அதிக கவனம் செலுத்துகிறோமா அல்லது தண்டனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா?

பழைய உடன்படிக்கையின் மகிமையானது மோசேயினுடைய முகத்திலே உண்டான ஒழிந்துபோகிற மகிமையாக இருந்தது. ஆனால் புதிய உடன்படிக்கையின் மகிமையானது என்றென்றும் ஒழிந்துபோகாமல் நிலைத்திருக்கிற மகிமையாக இருக்கிறது.

தேவன் கொடுத்த இந்த மகிமையான ஊழியத்தைக்குறித்து நாம் பாக்கியமாக கருதுகிறோமா?

<u>செயல்முறை</u>

தேவன் கொடுத்த இந்த மகிமையான ஊழியத்திற்க்காக மற்றவருடன் சேர்ந்து நன்றி செலுத்துங்கள்.

## ஆவியென்னும் அச்சாரத்தை நமக்கு தந்திருக்கிறார் — நாள் 20

*<u>2 கொரி 5:5-7</u> எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. 6. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது. 7. நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.*

நாம் யாருக்காவது வைப்பு (அச்சார) தொகையாக பணம் கொடுத்தால், உதாரணமாக ஒரு வீட்டிற்க்கு வைப்பு தொகையாக ஒரு குறிப்பிட்ட

பணத்தை கொடுத்தபின்பு ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு பின்பு முழு பணத்தையும் நாம் செலுத்துவோம் என்று உறுதியளிப்பதாக அது இருக்கும்.

தேவன் பரிசுத்த ஆவியானவரை நமக்கு வைப்பாக அளித்திருக்கிறபடியால் அது வரவிருக்கும் காரியங்களுக்கு உத்தரவாதமாக இருக்கிறது. இதற்க்கிடையில் இந்த கூடாரமாகிய உலகத்தில் இருக்கும்போது ஏக்கத்துடன் பரலோகத்தை தரித்துக் கொள்ளவேண்டுமென தவிக்கிறோம்.

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். நம்முடைய அப்பாவின் வீட்டில் நமக்காக ஒரு இடம் தயாராக உள்ளது.

<u>செயல்முறை</u>

பரிசுத்த ஆவியானவரால் வரும் விசுவாசத்தால் இன்று ஏதாவது புரட்சிகரமாக செய்ய முடிவெடுங்கள்.

---

**பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் இலக்கை அடைதல் நாள் 21**

*<u>கலாத்தியர் 3:1-3</u> புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2. ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?*

பரிசுத்த ஆவியானவர் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் கிடைக்கப்பெற்ற பரிசு கிடையாது. நம்முடைய சாதாரணமான விசுவாசத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவரை பெற்றோம். தொடர்ச்சியான விசுவாசத்தின் மூலமும், இயேசுவை சார்ந்திருப்பதன் மூலமும் ஆத்மீக வளர்ச்சி அல்லது முதிர்ச்சி அடைகிறோம் என்று கலாத்தியர்கள் எண்ணாமல், இவையெல்லாம் தங்கள் சரீர பிரகாரமாக செய்கிற கிரியைகளினால் தான் கிடைக்கிறது என்று சிந்தித்து தங்களை ஏமாற்றிக்கொண்டிருந்தனர்.

ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நாம் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறோமா?

<u>செயல்முறை</u>

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கிரியைகளின்மீது நம்பிக்கை வைத்து செய்த காரியங்களை சரிசெய்து மாற்ற முடிவெடுங்கள். புத்தாண்டில் நீங்கள் எடுத்த தீர்மாங்கங்களையும் மற்றும் இலக்குகளையும் கவனித்து அவைகளைஅடைய முயற்சிகள் நடக்கிறதா என்று பாருங்கள். நீங்கள் எடுத்த முடிவுகளைக்காட்டிலும் இன்னும் அதிகமாக தேவனுடைய வல்லமையினால் விசுவாசத்துடன் பரிசுத்த ஆவியானவரின் உதவியை தொடர்ந்து நாடுங்கள்.

---

**“அப்பா, பிதாவே” என்று கூப்பிடத்தக்க ஆவியை தந்தருளியிருக்கிறார் நாள் 22**

*<u>கலாத்தியர் 4:6-9</u> மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். 7. ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். 8. நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். 9. இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?*

நீங்கள் ஒரு சிறந்த அரசன் அல்லது ஜனாதிபதியின் மகனாக இருக்கிறீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களுடைய வாழ்க்கை முழுவதும் வித்தியாசமானதாயிருக்கும். ஒரு அரசனுக்கு மகனாக இருக்கும்போது என்ன சில கனவுகள் வைத்திருப்பீர்கள்?

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் இனி அடிமை கிடையாது அவருடைய மகன். அவருடைய சுதந்திரனாய் நம்மை ஏற்படுத்தினார். அவருடைய இராஜ்ஜியத்திற்க்காக கனவுகள் வைத்திருக்கிறோமா? தேவன் நம்மை அவருடைய மகன்கள் / மகள்கள் என்று அழைக்கக்கூடிய ஒரு பெரிய பாக்கியத்தை பெற்றிருக்கிறோம்.

நீங்கள் எந்த ஒரு காரியத்திலோ அல்லது யார்மீதிலோ அல்லது ஏதாவது தவறான கொள்கைகளாளோ அடிமைப்பட்டவர்களாயிருக்கிறீர்களா?

<u>செயல்முறை</u>

நீங்கள் தூண்டப்படும் பெலவீனமான மற்றும் தவறான கொள்கைகள் ஏதேனும் இருப்பின் அதை பட்டியலிட்டு அதிலிருந்து வெளிவர தேவன் உதவுமாறு ஜெபியுங்கள். நீங்கள் ஆத்மீகமாக வசனத்தில் வேரூன்றியிருப்பதற்க்கு உதவி செய்யும் நபரிடம் இதைக்குறித்து கலந்துரையாடவும்.

**ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் — நாள் 23**

*<u>கலாத்தியர் 5:16-17</u> பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். 17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டோமானால் மாம்ச இச்சைகளை நிறைவேற்றாமல் இருப்போம். ஆவியானவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார்.

உங்கள் அப்பா உங்களுடனே இருக்கிறார் அந்தவேளையில் நீங்கள் சிலவிதபாவ செயல் செய்ய முயலும்போது எப்படியிருக்கும் என்று சிந்தித்துபாருங்கள். அவர் உங்களை அனுமதிக்கமாட்டார். இன்னொரு விதத்தில் கூறவேண்டுமானால், நீங்கள் பாவம் செய்ய தீர்மானிக்கும்போது உங்களுடைய அப்பாவை பக்கத்திலிருந்து தள்ளிவிட்டுத்தான் அந்த பாவத்தை செய்யமுடியும்.

நம்முடைய பாவஇச்சைகளை நிறைவேற்றுவதற்க்காக நம்முடைய ஆவியானவரை புறம்பே தள்ளாதபடிக்கு சிறந்த முயற்சி எடுப்போம்.

<u>செயல்முறை</u>

உங்களிடத்தில் இருக்கும் மாம்ச இச்சைகளின் விருப்பங்களை அடையாளம் கண்டு அதிலிருந்து விடுபட ஜெபிப்போம். நீங்கள் எப்பொழுதெல்லாம் சோதிக்கப்படுகிறீர்களோ அப்பொழுதெல்லாம் கவனமாகவும் அதிக எச்சரிக்கையுடனும் பரிசுத்த ஆவியானவருக்கு செவிசாய்த்து, அவர் காட்டும் திசையில் செல்வதற்க்கு முடிவெடுங்கள்.

**ஆவியின் கனி — நாள் 24**

*<u>கலாத்தியர் 5:22-25</u> ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23. சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. 24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். 25. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.*

உங்களிடம் ஆவியின் கனி உள்ளதா? யார் அந்த கனியை உற்பத்தி செய்கிறார்? நாம் இல்லை, பரிசுத்த ஆவியானவரால் மட்டும் தான் உற்பத்தி செய்யமுடியும் என்று உங்களால் புரிந்துகொள்ளமுடிகிறதா? நாம் என்ன செய்யவேண்டும் என்றால் பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டு நம்முடைய இருதயத்தில், மனதில் மற்றும் நம்முடைய வாழ்க்கையில் அறைகளை தயார் படுத்த வேண்டும். அப்படியென்றால் ஆவியானவருக்கு மாறாக இருக்கும் அறைகளை அகற்றவேண்டும். சுபாவ இச்சைகளை மரணத்திற்க்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். (எப்படியெனில் தோட்டத்தில் நல்ல மரமானது நல்ல கனிகளைக் கொடுக்க தோட்டத்திலிருக்கும் முட்கள், புதர்கள் மற்றும் களைகளை எடுக்கிறோமோ அதேப்போன்று) நமக்காக வாழ்வதை நிறுத்திவிட்டு

கிறிஸ்துவிற்க்காக வாழ்வோம். அப்பொழுது ஆவியானவர் கனிகளை உற்பத்தி செய்வார்.

ஒரு ஆத்மீகமான நபரிடம் அவருடைய வாழ்க்கையில் சொல்லப்படும் எல்லா தரமான செயல்களும் தென்படும். நாம் மாம்ச இச்சைகளின் ஆசையையும், வாஞ்சைகளையும் சிலுவையில் அறைந்தால் மட்டுமே இப்படிப்பட்ட தரமான குணங்கள் நம்முடைய வாழ்க்கையில் கிடைக்கும்.

**செயல்முறை**

மாம்ச இச்சைக்கேற்ற கனிகள் உங்களுக்குள் இருந்தால் அதை பட்டியலிட்டு, ஜெபத்துடன் தெளிவான திட்டங்களை போட்டு அந்த மாம்ச இச்சையை மரணத்திற்க்கு ஒப்புக்கொடுப்போம். பரிசுத்த ஆவியானவரால் ஆவியின் கனி உங்களில் உற்பத்தியாகி வளர்ந்துகொண்டிருந்தால் அதை சந்தோஷமாக அனுபவியுங்கள்.

## பரிசுத்த ஆவியானவர் ஒரு முத்திரை நாள் 25

*<u>எபேசியர் 1:13-14</u> நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். 14. அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.*

ஒரு சான்றிதழானது ஒரு சரியான முத்திரை (அடையாளம்) பெறவல்லையென்றால் அது அனுமதிக்கத்தக்கது கிடையாது என்று நமக்குத் தெரியும்.

நாம் சுவிசேஷத்தை கேட்டபொழுது கிறிஸ்துவுடனே இணைக்கப்பட்டோம். நாம் விசுவாசித்து, மனந்திரும்பி பிறகு ஞானஸ்நானம் பெற்று, அவருடைய முத்திரையாகிய பரிசுத்த ஆவியானவரை பெற்றோம்.

தேவனிடத்திலிருந்து நீ என்னுடையவன் என்கிற சான்றிதழை பெறுவது எவ்வளவு சிறப்பானது. ஜீவபுத்தகத்தில் நம்முடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்வது எவ்வளவு பெரிய பாக்கியம்.

**செயல்முறை**

உங்களை அழைத்து உங்களுக்கு வேதாகமத்தை கற்றுக்கொடுத்த நபரை நினைவு கூறுங்கள். அவருக்காக ஜெபம் செய்து அவருக்கு ஒரு உற்சாகம் தரக்கூடிய வாசகத்தை அனுப்புங்கள். அங்கீகரிக்கப்-பட்டிருக்கிறீர்கள் என்கிற முத்திரையான பரிசுத்த ஆவியானவருக்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

## ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுங்கள் நாள் 26

*<u>எபேசியர் 4:1-3</u> ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, 2. மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, 3. சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.*

ஒவ்வொரு குழு/கூட்டம்/சபைக்கு ஒற்றுமை என்பது மிகப்பெரிய ஒன்றாகும். சாத்தான் அவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒற்றுமையை குலைக்கும் ஆயுதத்தை திறவுகோலாக பயன்படுத்துவான்.

நாம் ஒரு குடும்பமாக, குடும்பசபையாக ஒற்றுமையாக இருக்கிறோமா? இல்லையென்றால், மாற்றத்தை ஏற்படுத்துவதற்க்கான நேரம் இது. இதை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுங்கள். ஒரு சிறிதளவு தாமதம் மிகப்பெரிய பாதிப்பை ஏற்ப்படுத்தும்.

ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமெனில், நாம் முழுமையான தாழ்மை மற்றும் தயவு, பொறுமை அது மட்டுமன்றி அன்பினால் ஒருவரையொருவர் தாங்கவேண்டும்.

**செயல்முறை**

குடும்பத்திலும், சபையிலும் எவ்வாறு ஆவியின் ஒருமையைக்காத்து கட்டி தாழ்மையில் வளரவேண்டும் என்கிற வழியை அறிய பரிசுத்த ஆவியானவரிடம் வழிநடத்தும்படி உதவி கேளுங்கள். ஒற்றுமையை பாதிக்கும் எந்தவித பெறுமை உங்களிடத்தில் இருக்கிறதோ அதைக்குறித்து அறிக்கையிட்டு மனந்திரும்பி சமாதான இணைப்பைக் கட்டுங்கள்.

---

**ஆவியானவர் ஒருவர் மாத்திரமே இருக்கிறார்** நாள் 27

---

*எபேசியர் 4:4-7* உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; 5. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், 6. எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். 7. கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.*

கிறிஸ்துவிடமிருந்து கிருபை பெறுவது மிகப்பெரிய பாக்கியம். அதை அவர் பகிர்ந்தளித்திருக்கிறார். நாம் அனைவரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவனே எல்லாருக்கும் எல்லாவற்றிற்க்கும் எல்லாமுமாயிருக்கிறார். நமக்கு ஒரே சரீரம் மற்றும் ஒரே ஆவி இருக்கிறது.

நாம் எல்லாவற்றிலும் தேவனைக் காண்கிறோமா? ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோமா? தேவனுடைய இந்த திட்டத்தின்படி நாம் ஒற்றுமையாயிருப்பதை நம்மை சுற்றியிருக்கும் மக்கள் பார்ப்பார்களா?

அல்லது நமக்காக முழுவதுமாக ஒரு தனி பாதைவகுத்து, என்னுடைய வழி, என்னுடைய திட்டம், என்னுடைய எண்ணம், தேவனுடனான என் உறவு, என்னுடைய புரிதல் என்று வைத்திருக்கிறோமா.....

**செயல்முறை**

அவருடைய கிருபையையும் அவருடைய அழைப்பையும் குறித்து நன்றி செலுத்துங்கள். நீங்கள் அழைக்கப்பட்டதையும், தேவனைப் பின்பற்ற எடுத்த அனைத்து முடிவுகளையும் நினைவுகூர்ந்து ஜெபியுங்கள். அனைவரையும் சமமாகவும் அதிக மரியாதை மற்றும் அன்புடனும் நடத்துங்கள்.

---

**தேவனுடைய பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்**

நாள் 28

*எபேசியர் 4:29-31* கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். 30. அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். 31. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.*

நாம் ஆதியாகமம் 6:5-6 வரை வாசிக்கும்போது, மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று தேவன் கண்டு தான் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதிற்க்காக மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்திற்க்கு விசனமாயிருந்தது.

நாம் பரிசுத்ததை புறக்கணிப்பதன் மூலமும் அல்லது பொருள்சார்ந்த விஷயங்களை நம்புவதன் மூலமும் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்த முடியும். நாம் ஜெபம் செய்யக்கூட நேரமின்றி இருக்கும்போது பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம்.

உங்களுடைய வார்த்தைகள் மற்றும் நடக்கைகள் மற்றவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்க்காக இருக்கின்றனவா?

**செயல்முறை**

ஜெபத்துடன் நீங்கள் உங்களுடைய உரையாடலைக்குறித்து உங்களுக்கு நெருக்கமானவர்களிடத்தில் அது பிறரைக் கட்டுகிறதா

அல்லது காயப்படுத்துகிறதா என்று கேட்கவும். உங்களுடைய தவறுகளை நீங்கள் ஒப்புக்கொண்டு அதை தேவனிடத்தில் அறிக்கையிட்டு பிறரைக் கட்டுவதற்க்கான வார்த்தைகளை மட்டுமே பேசுவதற்க்கு பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலை நாடும்படி ஜெபியுங்கள், ஏனென்றால் நாம் பிறரை காயப்படுத்தும்போது பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம். பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதற்க்கு பதிலாக நம்முடைய வார்த்தைகள் மற்றும் நம்முடைய வாழ்க்கையானது பரிசுத்த ஆவியானவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவேண்டும்.

## ஆவியின் பட்டயம் நாள் 29

*<u>எபேசியர் 6:16-17</u> பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். 17. இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

நாம் ஆவிக்குரிய வீரர்களாயிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். பிசாசினுடைய தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க்கும்படி சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துகொள்ளவேண்டுமென தேவன் விரும்புகிறார்.

போர் வீரனுடைய முக்கிய ஆயுதங்களில் ஒன்று பட்டயம் ஆகும். பட்டயம் இல்லாமல் போருக்கு போகிற ஒரு போர் வீரனை கற்பனை செய்து பாருங்கள். நாம் தேவனுடைய வார்த்தையை தியானிக்காத பட்சத்தில் அப்படித்தான் இருக்கும்.

அநேக மக்கள் தேவனுடைய வார்த்தையை கவனிக்காததால்தான் தேவனை விட்டு விலகி செல்கிறார்கள். உங்களுடைய வேத வாசிப்பு எவ்வாறு இருக்கிறது?

### <u>செயல்முறை</u>

ஒவ்வொரு நாளும் வேதவாக்கியங்களை தியானிப்பதற்க்கு திட்டம் வைக்க வேண்டும், அதே சமயத்தில் நீங்கள் கற்றவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதற்க்கும் ஒரு இலக்கு வைக்க வேண்டும். தேவன் உங்களிடத்தில் சொல்வதைக் குறித்து குறிப்புகள் எடுப்பதை ஒரு வழக்கமாகக்கொண்டு அதைக்குறித்து ஜெபித்து தேவனுடைய வார்த்தையை உண்மையுடன் பின்பற்றுங்கள். விசுவாசத்தைக் கட்டுவதற்க்கும் மற்றும் சாத்தானை எதிர்த்து போராடுவதற்க்கும் நீங்கள் வசனங்களை மனப்பாடம் செய்யும் வழக்கத்தை திட்டம் செய்யுங்கள்.

## தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடு நாள் 30

*<u>தீமோத்தேயு 1:6-7</u> இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். 7. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.*

தேவன் நமக்கு பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். தைரியம், பெலம், அன்பு மற்றும் தெளிந்தபுத்தி ஆகியவற்றால் நம்முடைய வாழ்க்கையானது நிறைந்திருக்கிறதா என்கிற கேள்வியை நாம் கேட்கவேண்டும்.

நாம் தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடவேண்டுமென தேவன் விரும்புகிறார். தேவன் கொடுத்தவற்றை அனல்மூட்டி எழுப்பிவிட நாம் என்ன முயற்சிகள் மேற்கொள்கிறோம்.

"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி!" என்று தேவன் கூறினார் என்றால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்.

### <u>செயல்முறை</u>

ஏழ்மையாயிருக்கும் ஒரு நபரிடத்தில் உங்களுடைய அன்பை காட்டுங்கள்.

*<u>யூதா 1:18-20</u> கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. 19. இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே. 20. நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைஉறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி,*

நம்முடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தை கட்டி எழுப்புவதற்க்கான எல்லா முயற்சிகளையும் நாம் எடுக்கிறோமா? துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர்களால் நாம் திசைதிருப்பப்படுகிறோமா?

இவர்கள் தங்கள் ஜென்ம சுபாவத்திற்க்குரிய காரியங்களை பின்பற்றி பலரையும் அவ்வழியில் நடத்துவார்கள். நாம் அவர்களுடைய கோட்பாடுகளுக்கு சிக்கிக்கொள்ளாதபடி ஜெபிக்கவேண்டும்.

எபேசியர் 6:18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

<u>செயல்முறை</u>

உங்கள் குடும்ப சபையிலிருக்கும் ஒவ்வொரு சீஷர்களுடைய பெயரையும் சொல்லி அவர்களுக்காக ஜெபித்து, நாம் தேவனுடைய சத்தத்தை தெளிவாக கேட்டு உண்மையுடன் அதை நடைமுறைப்படுத்துவதற்க்கு ஞானத்தை அவர் அருளும்படி வேண்டுங்கள்.